**பத்தாம் வகுப்பு – தமிழ்**

**நேரம் – 1.30 மணி** **தேர்வு - 3 (இயல் 5,6 )** **மதிப்பெண்கள் 50**

**பகுதி – I (மதிப்பெண்கள் 8)**

**i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** **7×1=7**

**ii) குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.**

1. “இங்கு நகரப் பேருந்து நிற்குமா? என்று வழிப்போக்கர் கேட்பது --------- வினா.
“அதோ, அங்கே நிற்கும்” என்று மற்றொருவர் கூறுவது --------- விடை.
அ) ஐயவினா, வினா எதிர்வினாதல் ஆ) அறிவினா, மறைவிட
இ) அறியா வினா, சுட்டு விடை ஈ) கொளல் வினா, இனமொழி விடை
2. ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடுகின்றனர். இத்தொடரின் செயப்பாட்டு வினைத்தொடர் எது ?
அ) ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடுவர்
ஆ) ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடப்படுகிறது
இ) ஒயிலாட்டம் இரு வரிசையில் நின்று ஆடப்படுகிறது
ஈ) ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகின்றனர்.
3. மலர்கள் தரையில் நழுவும் எப்போது ?
அ) அள்ளி முகர்ந்தால் ஆ) தளரப் பிணைத்தால்
இ) இறுக்கி முடிச்சிட்டால் ஈ) காம்பு முறிந்தால்
4. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?
அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால் ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்
இ) அரசன் கொடுங்கோல் ஆட்சிப்புரிவதால் ஈ) அங்கு வறுமை இல்லாததால்
5. குளிர்காலத்தைப் பொழுதாக கொண்ட நிலங்கள் -----------.
அ) முல்லை , குறிஞ்சி , மருதம் நிலங்கள் ஆ) குறிஞ்சி , பாலை , நெய்தல் நிலங்கள்
இ) குறிஞ்சி ,மருதம் ,நெய்தல் நிலங்கள் ஈ) மருதம் , நெய்தல் , பாலை நிலங்கள்.

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை
மருத்துவதும் ஆவிக்கும் அருந்துணையாய் இன்பம்
பொருத்துவதும் கல்வி யென்றே போற்று

6. இலக்கணக்குறிப்புத் தருக – அகற்றி
அ)பண்புத்தொகை ஆ) வினைத்தொகை இ) வினையெச்சம் ஈ) பெயரெச்சம்
7. பொருள் தருக – ஆவி
அ) உயிர் ஆ) உடம்பு இ) புகை ஈ) நூல்

**பகுதி – II (மதிப்பெண்கள் 8)** **பிரிவு -1**

**எவையெனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** **2×2=4**

8. விடைக்கேற்ற வினாவினை அமைக்க.
அ. கரகாட்டத்தின் துணை ஆட்டமாகவும் மயிலாட்டம் ஆடப்படுகிறது
ஆ) பிள்ளை தமிழ் இரண்டு வகைப்படும்.

9. தாய்மொழியும் ஆங்கிலமும் தவிர நீங்கள் கற்க விரும்பும் மொழியினைக் குறிப்பிட்டுக் காரணம் எழுதுக.

10. கூரான ஆயுதம் எது என்று செந்நாப் போதகர் கூருகிறார்? ஏன் என்பதை விளக்குக.

**பிரிவு -2**

**எவையெனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க வெண்டும்.** 2×2=4

11. நேற்று நான் பார்த்த அர்ச்சுணன் தபசு என்ற கூத்தில் அழகிய ஒப்பனைகளையும் சிறந்த நடிப்பையும் இனிய பாடல்களையும் நுகர்ந்து மிக மகிந்தேன் என்று சேகர் என்னிடம் கூறினான். இக்கூற்றை அயற்கூற்றாக எழுதுக.

12. கலைச்சொல் காண்க. அ) Intellectual - ஆ) Symbolism -

13. பகுபத உறுப்பிலக்கணம் தருக. பதிந்து

**பகுதி – III (மதிப்பெண்கள் 9) பிரிவு - 1**

**எவையெனும் ஒரு வினாவிற்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 1×3=3

14. கரகாட்டம் – விளக்குக.

15. கீழ்க்காணும் உரையினைப் படித்து கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்க.

'தப்பு' என்ற தோற்கருவியை இசைத்துக் கொண்டே அதன் இசைக்கு ஏற்ப ஆடுகின்ற நிகழ்கலையே தப்பாட்டமாகும். ஆண்கள் மட்டுமே ஆடிவந்த இந்த ஆட்டம் தற்போது பெண்களாலும் ஆடப்படுகின்றது. இவ்வாட்டம் தப்பாட்டம், தப்பட்டை, தப்பு என்றும் அழைக்கப்படுகின்றது. தப்பு என்பது வட்டவடிவமாக அமைந்துள்ள அகன்ற தோற்கருவி. கோவில் திருவிழா, திருமணம், இறப்பு, விழிப்புணர்வு முகாம், விளம்பர நிகழ்ச்சி ஆகியவற்றில் தப்பாட்டம் ஆடப்படுகின்றது. 'தப்தப்' என்று ஒலிப்பதால் அந்த ஒலியின் அடியாகத் 'தப்பு' எனப் பெயர் பெற்றதெனக் கூறப்படுகிறது.

அ) தப்பு ஆட்டத்தின் வேறுபெயர்கள் யாவை?

ஆ) 'தப்பு' பெயர்க்காரணம் தருக.

இ) தப்புவின் வடிவம் என்ன?

**பிரிவு - 2**

**எவையெனும் ஒரு வினாவிற்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 1×3=3

16. நவீன கவிதையில் வெளிப்படும் நுண்மை உள்ளம், பூத்தொடுக்கும் நாட்டுப்புறப் பாடலில் வெளிப்படுகிறது. ஒப்பிட்டு எழுதுக.

17. "செம்பொனடி" எனத் தொடங்கும் முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ் பாடலை எழுதுக.

**பிரிவு - 3**

**எவையெனும் ஒரு வினாவிற்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 1×3=3

18. "முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்." – இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையைச் சுட்டி விளக்குக.

19. 'கடற்கரையில் உப்புக்காய்ச்சுதல் நடைபெறுகிறது; மலைப்பகுதியில் மலைப்பயிர்களும் நிலப்பகுதியில் உழவுத்தொழிலும் நடைபெறுகின்றன.' – காலப்போக்கில் பல மாற்றங்கள் நிகழ்ந்த போதிலும் பண்டைத் தமிழரின் திணைநிலைத் தொழில்கள் இன்றளவும் தொடர்வதையும் அவற்றின் இன்றைய வளர்ச்சியும் எழுதுக.

## பகுதி – IV (மதிப்பெண்கள் (10)

**அனைத்தது வினாக்களுக்கும் மட்டும் விடையளிக்க.** 2×5=10

20. அ) சந்தக் கவிதையில் சிறக்கும் கம்பன் என்ற தலைப்பில் உரை எழுதுக. (அல்லது)

ஆ) கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு நூலக உறுப்பினர் படிவத்தினை நிறைவு செய்க.

குறிப்புகள் : பெயர் – எழிலன் ; தந்தை பெயர் – இலக்கியன் ; விலாசம் – 25, காமராசர் தெரு, விழுப்புரம்.

21. அ) பள்ளியிலும் வீட்டிலும் நீங்கள் நடந்துகொள்ளும் விதம் குறித்து ஐந்து தொடர்களில் எழுதுக.

(அல்லது)

ஆ) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



## பகுதி - V (மதிப்பெண்கள் 16)

**அனைத்தது வினாக்களுக்கும் மட்டும் விடையளிக்க.** 2×8=16

22. அ) நிகழ்கலை வடிவங்கள் – அவை நிகழும் இடங்கள் அவற்றின் ஒப்பனைகள் – சிறப்பும் பழமையும் – இத்தகைய மக்கள் கலைகள் அருகிவருவதற்கான காரணங்கள் – அவற்றை வளர்த்தெடுக்க நாம் செய்ய வேண்டுவன - இவை குறித்து நாளிதழ் ஒன்றில் தலையங்கம் எழுதுக.

(அல்லது)

ஆ) தமிழ் இலக்கியவளம் - கல்வி மொழி- பிறமொழிகளில் உள்ள இலக்கிய வளங்கள்- அறிவியல் கருத்துகள் – பிறதுறைக் கருத்துகள் – தமிழுக்குச் செழுமை – மேற்கண்ட குறிப்புகளைக் கொண்டு செம்மொழித் தமிழுக்கு வளம் சேர்க்கும் மொழிபெயர்ப்புக் கலை என்ற தலைப்பில் வார இதழ் ஒன்றுக்கு நடுப்பக்கக் கட்டுரை எழுதுக.

23. அ) உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசு பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வைக் குறிப்புகள் கொண்டு கட்டுரையாக்குக.

(முன்னுரை - இனிய காட்சி – பல்துறை அரங்குகள் – விளையாட்டு அரங்குகள் – உணவு அரங்குகள் – விளையாட்டு பொருட்கள் (அல்லது)

ஆ) "புதிய நம்பிக்கை" என்ற கதையின் மையக்கருத்தினைப் புரிந்துகொண்டு நும் சொந்த நடையில் எழுதுக.

## நூலக உறுப்பினர் படிவம்

- ------------------------------------------------------------------------------------------------- மாவட்ட நூலக ஆணைக்குழு

மைய / கிளை / ஊர்ப்புற நூலகம் ----------------------------------------------------

## உறுப்பினர் சேர்க்கை அட்டை

அட்டை எண்: ----------- உறுப்பினர் எண்: ------------

1. பெயர் :

2. தந்தை பெயர் :

3. பிறந்த தேதி :

4. வயது :

5. படிப்பு :

6. தொலைப்பேசி எண் :

7. அஞ்சல் முகவரி :
 (அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்)

நான் -------------------------நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்ய இத்துடன் காப்புத்தொகை ரூ ---------------- சந்தா தொகை ரூ ------------------------- ஆக மொத்தம் ரூ ---------------------ரொக்கமாகச் செலுத்துகிறேன்.

நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.

இடம் : ------------------------------ தங்கள் உண்மையுள்ள

நாள் : ------------------------------

திரு/ திருமதி/ செல்வி/ செல்வன் ---------அவர்களை எனக்கு நன்கு தெரியும் எனச் சான்று அளிக்கிறேன்.

பிணைப்பாளர் கையொப்பம்

அலுவலக முத்திரை (பதவி மற்றும் அலுவலகம்)

www.Padasalai.Net